# ஆன்டிகுவா மற்றும் பார்புடாவிற்கு சிறப்பு செயலாளர் (AMS) அவர்களின் வருகை

**ஜூலை 27, 2015**

ஸ்ரீ ஆர் சுவாமிநாதன், செயலாளர், வெளிவிவகார அமைச்சு, 24-25 ஜூலை 2015 தேதிகளில் ஆன்டிகுவா மற்றும் பார்புடாவிற்கு விஜயம் செய்துள்ளார். இந்த விஜயத்தின் போது, அவர் ஆன்டிகுவா மற்றும் பார்புடா மாண்புமிகு பிரதமர் திரு கேஸ்டன் பிரவுன் அவர்களுக்கும் மற்றும் வெளியுறவு அமைச்சர் திரு சார்லஸ் ஹென்றி பெர்னாண்டஸ் மற்றும் சுகாதார அமைச்சர் திரு மோல்வின் ஜோசப் அவர்களுக்கும் அழைப்பு விடுத்தார். தற்காலிக நிரந்தர செயலர், திருமதி வலிக் கோம்ஸ் அவர்களையும் சந்தித்தார். முதலீடு, பாரம்பரிய மருத்துவம், தொழில்நுட்ப ஒத்துழைப்பு,கரிபியன் சமூகம்(CARRICOM),தென் அமெரிக்க மற்றும் கரீபியன் சமூக அரசு (CELAC) மற்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை மறுசீரமைப்பு பரிமாற்றம் உட்பட இருதரப்பு, பிராந்திய மற்றும் பலதரப்பு பிரச்சினைகள் பற்றி விவாதித்தனர்.

ஸ்ரீ ஆர் சுவாமிநாதன் இந்திய மணிபால் பல்கலைக் கழகம் நடத்தும் ஆன்டிகுவா அமெரிக்கப் பல்கலைக்கழக மருத்துவ கல்லூரிக்கும் விஜயம் செய்தத்தோடு அதன் தலைவர், துணைத் தலைவர் மற்றும் ஆசிரிய உறுப்பினர்களுடன் உரையாடினார்.

**புது தில்லி**

**ஜூலை 27, 2015**